முருகப்பெருமான் துணை

**மகான் அசுவினித்தேவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**17.12.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. ஞான சூட்சும மகாபலத்தை
நாம செபம் கொண்டே அடைய
ஞானமாக ஞானிகள் பூசையை
ஞாலமதில் அருளிய அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது சிலை திங்கள்
வரங்களென முதல் திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் முதல் நாள், 17.12.2023, ஞாயிற்றுக்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை அசுவினித்தேவர் யானும்
அகிலத்தார் ஞானம் பெற உரைப்பேன்
வாசிவென்ற ஞானிகள் படை
வலம்வந்து அரங்கன் பிரணவக் குடிலில்
4. குடிலில் வரம் தந்து அருளிவர
குருவேயென தேடி வரும் மக்கட்கு
தேடியே ஞானிகள் பூசை வழி
தெய்வ பலம் தானாய் கிட்டும்
5. கிட்டுமே அறிவுத் தெளிவு திடம்
குறைகளை தன்னுள் வாரா தடுத்து
இட்டமுடன் சரணாகதி தன்னை
இறைவழி ஈடுபாடாக்கி இனிதே
6. இனிதே கலித்துன்பங்கள் கடந்து
எல்லாம் அவன் செயலென
கனிவும் துணிவும் கூடிட உலகில்
கண்ணியமுற நடந்து சிறப்பர்

7. சிறப்பர் தருமவான்களாக
சிந்தையில் குருவருள் நிற்க
மறுப்பின்றி அறப்பணிகள் செய்து
மண்ணுலகில் தனித்துவம் அடைவர்
8. அடையவே அரங்கமகானின் சக்திமிகு
அன்னதான சேவை வழி
தடையற தொடர்ந்து வந்து
தரணியில் தரும பலம் பெருக்கி
9. பெருக்கியே எங்கும் ஞானிகள்
பிரம்ம சக்தியாக வெளிப்பட
கருத்தாக சேவை ஆற்றிவர
கருணைமிக்க அரங்கன் தயவால்
10. தயவாலே ஞானிகளாவர்
தரணிக்கு நல்லத் தலைமையை
தயவோடு தருகின்ற சக்திகளாக
தாமுரைப்பேன் உலகோர் சிறந்து
11. சிறந்துமே ஞானத் தலைமையை
சித்திமிகு ஞான ஆட்சியை
பரந்த உலகெல்லாம் படைப்பர்
பாடிவந்த துல்லிய ஆசி முற்றே

–சுபம்–